ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ லோககுரவே நம:

முமுக்ஷுப்படி

உபோத்காதம்

முமுக்ஷுவுக் கறியவேண்டும் ரஹஸ்யம் மூன்று. அதில் ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம். திருமந்த்ரத்தினுடைய சீர்மைக்குப்போரும்படி ப்ரேமத்தோடே பேணி யனுஸந்திக்கவேணும். மந்த்ரத்திலும் மந்த்ரத்துக்குள்ளீடான வஸ்துவிலும், மந்த்ரப்ரதனான வாசார்யன் பக்கலிலும், ப்ரேமங் கநக்க வுண்டானால் கார்யகரமாவது. ஸம்ஸாரிகள் தங்களையும் ஈச்வரனையும் மறந்து, ஈச்வரகைங்கர்யத்தையுமிழந்து, இழந்தோமென்கிற இழவுமின்றிக்கே, ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட, ஸர்வேச்வரன் – தன் க்ருபையாலே, இவர்கள் தன்னையறிந்து கரைமரஞ்சேரும்படி, தானே ஶிஷ்யனுமாய், ஆசார்யனுமாய் நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான். ஶிஷ்யனாய் நின்றது – ஶிஷ்யனிருக்குமிருப்பு நாட்டாரறியாமையாலே அத்தை யறிவிக்கைக்காக. ஸகல ஶாஸ்த்ரங்களாலும் பிறக்கும் ஜ்ஞானம் – ஸ்வயமார்ஜிதம் போலே, திருமந்த்ரத்தால் பிறக்கும் ஜ்ஞானம் – பைத்ருக தநம் போலே. ஹறவங்மந்த்ரங்கள்தான் அநேகங்கள். அவைதான் – வ்யாபகங்களென்றும், அவ்யாபகங்களென்று மிரண்டு வர்கம். அவ்யாபகங்களில் வ்யாபகங்கள் மூன்றும் ஶ்ரேஷ்டங்கள். இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு பெரிய திருமந்த்ரம் ப்ரதாநம். மற்றவை யிரண்டுக்கும் – அஶிஷ்ட பரிக்ரஹமும் அபூர்த்தியுமுண்டு. இத்தை வேதங்களும், ருஷிகளும், ஆழ்வார்களும், ஆசார்யர்களும் விரும்பினார்கள். வாச்யப்ரபாவம் போலன்று வாசகப்ரபாவம். அவன் தூரஸ்தனானாலும் இது கிட்டி நின்று உதவும். த்ரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே. சொல்லுங்க்ரமமொழியச் சொன்னாலுந் தன்ஸ்வரூபங்கெட நில்லாது. இதுதான் (குலந்தரும்) என்கிறபடியே எல்லா வபேக்ஷிதங்களையுங் கொடுக்கும். ஈச்வர்ய கைவல்ய பகவல்லாபங்களை ஆசைப்பட்டவர்க்களுக்கு அவற்றைக் கொடுக்கும். கர்ம – ஜ்ஞாந – பக்தியிலே இழிந்தவர்களுக்கு விரோதியைப்போக்கி அவற்றைத் தலைக்கட்டிக் கொடுக்கும். ப்ரபத்தியிலே யிழிந்தவர்களுக்கு ஸ்வரூபஜ்ஞாத்தைப் பிறப்பித்துக் காலக்ஷேபத்துக்கும் போகத்துக்கும் ஹேதுவாயிருக்கும். (மற்றெல்லாம் பேசிலும்) என்கிறபடியே, அறியவேண்டும் அர்த்தமெல்லாமிதுக்குள்ளேயுண்டு. அதாவது அஞ்சர்த்தம். பூர்வாசார்யர்கள் இதில் அர்த்த மறிவதற்கு முன்பு தங்களைப் பிறந்தார்களாக நினைத்திரார்கள். இதிலர்த்தஜ்ஞாநம் பிறந்த பின்பு (பிறந்தபின் மறந்திலேன்) இத்தையொழிய என்கிறபடியே வேறொன்றால் காலக்ஷேபம் பண்ணி யறியார்கள். வாசகத்திற் காட்டில் வாச்யத்திலே ஊன்றுகைக்கடி ஈச்வரனே உபாயோபேய மென்று நினைத்திருக்கை.

வாக்கியார்மாக்ஷரவிஹாறாதிகள்

இது தன்னிற் சொல்லுகிறவர்தம் – ஸ்வரூபமும், ஸ்வரூபானுரூபமான ப்ராப்யமும்; ஸ்வரூபமும், உபாயமும், ஃபலமுமென்னவுமாம். ஃபலமிருக்கும்படி – ப்ரமேயஶேகரத்திலும், அர்ச்சிராதிகதியிலுஞ் சொன்னோம். இதுதான் – எட்டுத்திருவக்ஷரமாய், மூன்று பதமாயிருக்கும். மூன்று பதமும் மூன்றர்தத்தைச் சொல்லுகிறது. அதாவது – ஶேஷத்வமும், பாரதந்த்ர்யமும், கைங்கர்யமும். இதில் முதற்பதம் ப்ரணவம். இது அ – என்றும், உ – என்றும், ம – என்றும், மூன்று திருவக்ஷரம். மூன்று தாழியிலே தயிரை நிறைத்துக்கடைந்து வெண்ணெய் திரட்டுமாபோலே மூன்று வேதத்திலும் மூன்றக்ஷரத்தையு மெடுத்தது. ஆகையாலிது ஸகலவேதஸாரம்.

அகாரார்த்தம்

இதில் அகாரம் – ஸகலஶஹ்தத்துக்குங் காரணமாய், நாராயணபஉத்துக்கு ஸங்ஹ்ரஹமாயிருக்கையாலே, ஸகலஜஹத்துக்குங் காரணமாய், ஸர்வ ரக்ஷகனான எம்பெருமானைச் சொல்லுகிறது. ரக்ஷிக்கையாவது – விரோமியைப் போக்குகையும், அபேக்ஷிதத்தைக் கொடுக்கையும். இவை யிரண்டும் – சேதநர் நின்றநின்ற அளவுக்கீடாயிருக்கும். ஸம்ஸாரிகளுக்கு விரோமி – ஶத்ருபீஙாதிகள், அபேக்ஷிதம் – அந்நபாநாஉிகள்; முமுக்ஷ ̄க்களுக்கு விரோமி – ஸம்ஸார ஸம்ஹந்யம், அபேக்ஷிதம் – பரமபஉப்ராப்தி. முக்தர்க்கும் – நித்யர்க்கும், விரோமி – கைங்கர்யஹாநி, அபேக்ஷிதம் – கைங்கர்யவ்ருஉ்மி. ஈஶ்வரனை யொழிந்தவர்கள் ரக்ஷகரல்லரென்னுமிடம் ப்ரபந்ந ப்ரித்ராணத்திலே சொன்னோம். ரக்ஷிக்கும்போது பிராட்டி ஸன்னிமி வேண்டுகையாலே, இதிலே ஶ்ரீஸம்ஹந்யமு மனுஸந்யேயம். அத்ர ஹஙவத்ஸேநாபதி மிஶ்ரர் வாக்யம் – அவன் மார்ப்பை விட்டுப் பிரியி லிவ்வக்ஷரம் விட்டுப்பிரிவது. ஹர்த்தாவினுடைய படுக்கையையும், ப்ரஜையினுடைய தொட்டிலையும், விடாதே யிருக்கும் மாதாவைப்போலே ப்ரமம சரம பஉங்களைவிடாதே யிருக்குமிருப்பு. ஶ்ரீ நந்உஹோபரையுங், க்ருஷ்ணனையும் விடாத யஶோதைப் பிராட்டியைப்போலே. ஒருவனடிமை கொள்ளும்போது, ஹ்ருஹணிக்கென்றன்றே ஆவணையோலை யெழுதுவது, ஆகிலும் பணி செய்வது ஹ்ருஹணிக்கிறே; அது போலே – நாம் பிராட்டிக்கடிமையா யிருக்கும்படி. ஆகப் பிரித்து நிலையில்லை. ப்ரஹையையும் – ப்ரஹாவானையும், புஷ்பத்தையும் – மணத்தையும் போலே. ஆகவிச்சேர்த்தி யுஉ்ஶேஶ்யமாய் விட்டது.

லுப்தவிபக்த்யர்த்தம்

இதிலே சதுர்மியேறிக்கழியும். சதுர்மியேறினபடி யென்னென்னில். நாராயணபஉத்துக்கு ஸங்ஹ்ரஹமா யிருக்கையாலே. இத்தால் ஈஶ்வரனுக்கு ஶேஷமென்கிறது. ஶேஷத்வம் உ ̄:கருபமாகவன்றோ நாட்டில் காண்கிற தென்னில். அந்த நியமமில்லை, உகந்த விஷயத்துக்கு ஶேஷமாயிருக்கு மிருப்பு ஸ ̄வமாகக் காண்கையாலே. அகாரத்திலே கல்யாணஹ ̄ணங்களைச் சொல்லுகையாலே இந்த ஶேஷத்வமுங் ஹ ̄ணத்தாலே வந்தது. ஶேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம். ஶேஷத்வமில்லாதபோது ஸ்வரூபமில்லை. ஆத்மாபஹாரமாவது – ஸ்வதந்த்ர மென்கிற நினைவு; ஸ்வதந்த்ரமாம்போது – இல்லையாய் விடும்.

உகாரார்த்தம்

ஸ்தாநப்ரமாணத்தாலே உகாரமவதாரணார்த்தம். இத்தாற் பிறர்க்கு ஶேஷமன்றென்கிறது. பெரிய பிராட்டியார்க்கு ஶேஷமென்கிற தென்றுஞ் சொல்லுவர்கள். அதிலும் அந்யஶேஷத்வங் கழிகையே ப்ரதாநம். தேவர்களுக்கு ஶேஷமான புரோடாஶத்தை நாய்க்கிடுமாப்போலே ஈஶ்வர ஶேஷமான ஆத்மவஸ்துவை ஸம்ஸாரிகளுக்கு ஶேஷமாக்குகை. பகவத் ஶேஷத்வத்திலும் அந்ய ஶேஷத்வங் கழிகையே ப்ரதாநம். (மறந்தும் புறந்தொழா மாந்தர்) என்கையாலே. இத்தால் – தனக்கும் பிறர்க்கு முரித்தன் றென்கிறது.

மகாரார்த்தம்

மகாரம் – இருபத்தஞ்சாமக்ஷரமாய், ஜ்ஞானவாசியுமா யிருக்கையாலே ஆத்மாவைச் சொல்லுகிறது. இதுதான் ஸமஷ்டிவாசகம். ஜாத்யேகவசனம். இத்தால் – ஆத்மா ஜ்ஞாதாவென்று தேஹத்தில் வ்யாவ்ருத்தி சொலித்தாயிற்று. தேஹத்தில் வ்யாவ்ருத்தி தத்வஶேகரத்திலே சொன்னோம். மணத்தையும், ஒளியையுங் கொண்டு – பூவையும், ரத்நத்தையும் விரும்புமாபோலே, ஶேஷமென்று ஆத்மாவை யாதரிக்கிறது; அல்லாதபோது (உயிரினாற்

குறைவிலம்) என்கிறபடியே த்யாஜ்யம்; அது தோன்ற ஶேஷத்வத்தைச் சொல்லி பின்னை ஆத்மாவைச் சொல்லுகிறது.

பதத்ரயஸமுதாயார்த்தம்

ஆக ப்ரணவத்தால் (கண்ணபுரமொன்றுடையானுக்கடியே னொருவர்க் குரியேனோ) என்கிறபடியே ஜீவபர ஸம்பந்தஞ் சொல்லிற்று. இத்தால் (தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு) என்றதாயிற்று. அகாரத்தாலும் – மகாரத்தாலும், ரக்ஷகனையும், ரக்ஷ்யத்தையுஞ் சொல்லிற்று, சதுர்த்தியாலும், உகாரத்தாலும் – ரக்ஷணஹேதுவான ப்ராப்தியையும், ஃபலத்தையுஞ் சொல்லிற்று.

விவரணவிபாகம்

இனிமேல் ப்ரணவத்தை விவரிக்கிறது. உகாரத்தை விவரிக்கிறது – நமஸ்ஸு. அகாரத்தை விவரிக்கிறது – நாராயணபதம், மகாரத்தை விவரிக்கிறது – சதுர்த்தி, நாரபதமென்றுஞ் சொல்லுவர்கள். அடைவே விவரியாதொழிகிறது – விரோதிபோ யனுஹவிக்கவேண்டுகையாலே.

நமஶ்ஶப்தார்த்தம்

நமஸ்ஸு – ந – என்றும், ம: – என்றும், இரண்டு பதம். ம: – என்கிற வித்தால் தனக்குரியனென்கிறது. ந – என்று அத்தைத் தவிர்க்கிறது. ஆக நம: என்கிற வித்தால் – தனக்குரிய னன்றென்கிறது. பிறர்க்குரியனான வன்று த்தன் வைலக்ஷண்யத்தைக் காட்டி மீட்கலாம், தனக்கென்று மன்று யோக்யதையுங்கூட அழியும். இத்தால் விரோதியைக் கழிக்கிறது. விரோதி தான் மூன்று. அதாவது – ஸ்வரூபவிரோதியும், உபாயவிரோதியும், ப்ராப்யவிரோதியும். ஸ்வரூபவிரோதி கழிகையாவது:– (யானே நீ யென்னுடைமையும் நீயே) என்றிருக்கை; உபாயவிரோதி கழிகையாவது:– (களைவாய் துன்பங் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்) என்றிருக்கை; ப்ராப்யவிரோதி கழிகையாவது:– (மற்றைநங்காமங்கள் மாற்று) என்றிருக்கை. ம: – என்கை ஸ்வரூபநாஶம்; நம: – என்கை ஸ்வரூபோஜ்ஜீவனம். இதுதான் ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், ஃபலத்தையுங் காட்டும். (தொலைவில்லி மங்கலந் தொழும்) என்கையாலே உபாயஞ் சொல்லிற்று; (அந்தி தொழுஞ் சொல்லு) என்கையாலே ஃபலஞ்சொல்லிற்று. (உற்றது முன்னடியார்க்கடிமை) என்கிறபடியே யிதிலே பாகவத ஶேஷத்வமும் அநுஸந்தேயம். இது அகாரத்திலே யென்றுஞ் சொல்லுவர்கள்; உகாரத்திலே யென்றுஞ் சொல்லுவர்கள். ஈஶ்வரன் தனக்கேயாயிருக்கும். அசித்துப் பிறர்க்கேயாயிருக்கும், ஆத்மா தனக்கும் பிறர்க்கும் பொதுவாயிருக்கும் என்று முற்பட்ட நினைவு; அங்ஙனன்றிக்கே அசித்துப்போலே தனக்கேயாகவெனைக் கொள்ளவேணுமென்கிறது நமஸ்ஸால். அதாவது போகதஶையில் ஈஶ்வரனழிக்கும்போது நோக்கவேணு மென்று அழியாதொழிகை. அழிகைக்கு ஹேது கீழே சொல்லிற்று; மேலுஞ் சொல்லும். இந்நினைவு பிறந்தபோதே க்ருதக்ருத்யன்; இந்நினைவில்லாத போது எல்லா ஸுக்ருதங்களுங் க்ருதம்; இந்நினைவிலேயெல்லா ஸுக்ருதங்களுமுண்டு; இதன்றிக்கே யிருக்கப் பண்ணும் – யஜ்ஞாதிகளும், ப்ராயஶ்சித்தாதிகளும் நிஷ்ப்ரயோஜநங்கள்; இது தன்னாலே எல்லா பாபங்களும் போம். எல்லா ஃபலங்களுமுண்டாம்.

நாராயணபதார்த்தம்

நாராயண னென்றது – நாரங்களுக் கயனமென்றபடி. நாரங்களாவன – நித்ய வஸ்துக்களின்னுடைய திரள். அவையாவன – ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளும், ஜ்ஞானசக்த்யாதிகளும், வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகளும், திருமேனியும், காந்திஸௌகுமார்யாதிகளும், திவ்யபூஷணங்களும், திவ்யாயுதங்களும், பெரியபிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்களும், நித்யஸூரிகளும், சத்ர சாமராதிகளும், திருவாசல் காக்கும் முதலிகளும், கணாதிபரும், முக்தரும், பரமாகாசமும், ப்ரக்ருதியும், பத்தாத்மாக்களும், காலமும், மஹதாதி விகாரங்களும், அண்டங்களும், அண்டத்துக்குட்பட்ட தேவாதிபதார்த்தங்களும்.

அயநபதார்த்தம்

அயனமென்றது – இவற்றுக்காச்ரயமென்றபடி. அங்ஙனன்றிக்கே யிவைதன்னையாச்ரயமாகவுடைய னென்னவுமாம். இவையிரண்டாலும் பலித்தது – பரத்வ ஸௌலப்யங்கள். அந்தர்யாமித்வமும், உபாயத்வமும், உபேயத்வமுமாகவுமாம். (எம்பிரானெந்தை) என்கையாலே, ஈச்வரனே யெல்லாவுறவும் முறையுமென்று சொல்லும். நாம் பிறர்க்கானவன்றும் அவன் நமக்காயிருக்கும். இரா மடமூட்டுவாரைப்போலே உள்ளே பதி கிடந்து, ஸத்தையே பிடித்து நோக்கிக்கொண்டு போரும்.

வ்யக்தசதுர்த்யர்த்தம்

ஆயவென்கிற வித்தால் (சென்றாற் குடையாம்) என்கிறபடியே யெல்லா வடிமைகளுஞ் செய்யவேணுமென்றபேக்ஷிக்கிறது. நமஸ்ஸாலே தன்னோடுறவில்லையென்று வைத்து கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கக்கூடுமோ வென்னில். (படியாய்க் கிடந்துன் பவளவாய்க்காண்பேனே) என்கிறபடியே கைங்கர்யப்ரார்த்தனை வந்தேறியன்று, ஸ்வரூப ப்ரயுக்தம். ஆகையால் (வழிவிலாவடிமை செய்யவேண்டு நாம்) என்கிற ப்ரார்த்தனையைக் காட்டுகிறது. (கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கு முண்டோ கண்கள்துஞ்சுதல்) என்னுமாப்போலெ காண்பதற்கு முன்புறக்கமில்லை; ஸதாபச்யந்தியாகையாலே உறக்கமில்லை. (பழுதேபபகலும் போயின) என்று இழந்த நாளைக்குக் கூப்பிடுகிறவனுக் குறங்கவிரகில்லை. (அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்) என்னா நின்றார்களிறே. இவ்வடிமைதான் – (ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி) என்கிறபடியே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் அநுவர்த்திக்கும். எட்டிழையாய், மூன்று சரடாயிருப்பதொரு மங்கள ஸூத்ரம் போலே திருமந்த்ரம். இத்தாலீச்வரன் ஆத்மாக்களுக்குப் பதியாய் நின்று ரக்ஷிக்குமென்கிறது.

மந்த்ரஸமுதாயார்த்தம்

ஆகத் திருமந்த்ரத்தால் – எம்பெருமானுக்கே யுரியேனான நான், என்க்குரியனன்றிக்கே யொழியவேணும், ஸர்வசேஷியான நாரயணனுக்கே யெல்லா வடிமைகளுஞ் செய்யப்பெறுவேனாக வேணுமென்றதாயிற்று.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

முமுக்ஷுப்படி

த்வயப்ரகரணம்

உபோத்காதம்

புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே விடுகையும், எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகையும், பேறு தப்பாதென்று துணிந்திருக்கையும், பேற்றுக்கு த்வரிக்கையும், இருக்கும் நாளுகந்தருளின நிலங்களிலே ப்ரவணனாய் குணாநுபவ கைங்கர்யங்களே பொழுது போக்காகையும், இப்படியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர் களேற்றமறிந் துகந்திருக்கையும், திருமந்த்ரத்திலும் – த்வயத்திலும் – நியதனாகையும், ஆசார்ய ப்ரேமங் கநத்திருக்கையும், ஆசார்யன் பக்கலிலும் – எம்பெருமான் பக்கலிலுங் க்ருதஜ்ஞனாய்ப் போருகையும், ஜ்ஞாநமும், விரக்தியும், ஶாந்தியும் உடையனாயிருக்கும் பரமஸாத்விகனோடே ஸகவாஸம் பண்ணுகையும், வைஷ்ணவாதிகாரிக்கு அவஶ்யாபேக்ஷிதம். இந்தவதிகாரிக்கு ரஹஸ்யத்ரயமு மநுஸந்தேயம். எல்லா ப்ரமாணங்களிலும் தேஹத்தாலே பேறென்கிறது; திருமந்த்ரத்தில் ஆத்மாவாலே பேறென்கிறது; சரமஶ்லோகத்தில் ஈஶ்வரனாலே பேறென்கிறது; த்வயத்தில் பெரிய பிராட்டியாராலே பேறென்கிறது. பெரிய பிராட்டியாராலே பேறாகையாவது:– இவள் புருஷகாரமானாலல்லது ஈஶ்வரன் கார்யஞ் செய்யானென்கை. த்வயத்துக் கதிகாரி – ஆகிஞ்சந்யமும், அநந்ய கதித்வமும் உடையவன். இவையிரண்டும் ப்ரபந்ந பரித்ராணத்திலே சொன்னோம்.

வாக்யார்த்தம்

இதில் முற்கூற்றால் – பெரியாபிராட்டியாரை முன்னிட்டு ஈஶ்வரன் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறது; பிற்கூற்றால் – அச்சேர்த்தியிலே யடிமையை யிரக்கிறது.

ஸ்ரீஶப்தார்த்தம்

[ஸ்ரீ] – என்று பெரியபிராட்டியாருக்குத் திருநாமம். ஶ்ரீயதே, ஸ்ரீயதே. இதுக்கர்த்தம் – எல்லார்க்கு மிவளைப்பற்றி ஸ்வரூபலாபமாய், இவள் தனக்கும் அவனைப்பற்றி ஸ்வரூபலாபமாயிருக்கும் – என்று. இப்போதிவளைச்சொல்லுகிறது – புருஷகாரமாக. நீரிலே நெருப்புக் கிளருமாப்போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால் பொறுப்பதிவளுக்காக. இவள் தாயாய் இவர்கள் க்லேஶம் பொறுக்க மாட்டாதே அவனுக்குப் பத்நியாய் இனிய விஷயமா யிருக்கையாலே, கண்ணழிவற்ற புருஷகாரம். திருவடியைப் பொறுப்பிக்குமவள் தன்சொல் வழிவருமவனைப் பொறுப்பிக்கச் சொல்லவேண்டாவிறே.

மதுப்பினர்த்தம்

மதுப்பாலே இருவர் சேர்த்தியும் நித்யமென்கிறது. இவளோடே கூடியே வஸ்துவினுடைய வுண்மை. ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யத்தையும், சேதனனுடைய வபராதத்தையுங், கண்டகலமாட்டாள். சேதநனுக்கிவை யிரண்டையும் நினைத்தஞ்சவேண்டா. இத்தால் – ஆஶ்ரயிக்கைக்கு ருசியே வேண்டுவது, காலம் பார்க்கவேண்டாவென்கிறது. இவள் ஸன்னிதியாலே காகந்தலைபெற்றது; அதில்லாமையாலே ராவணன் முடிந்தான்.

நாராயணஶப்தார்த்தம்

புருஷகார பலத்தாலே ஸ்வாதந்த்ர்யந் தலைசாய்ந்தால் தலையெடுக்குங் குணங்களைச் சொல்லுகிறது – [நாராயணபதம்]. அவையாவன:– வாத்ஸல்யமும், ஸ்வாமித்வமும், ஸௌஶீல்யமும், ஸௌலப்யமும், ஜ்ஞானமும், ஶக்தியும். குற்றங்கண்டு வெருவாமைக்கு–வாத்ஸல்யம், கார்யஞ்செய்யுமென்று துணிகைக்கு – ஸ்வாமித்வம், ஸ்வாமித்வங்கண்டகலாமைக்கு – ஸௌஶீல்யம், கண்டு பற்றுகைக்கு–ஸௌலப்யம், விரோதியைப்போக்கித் தன்னைக் கொடுக்கைக்கு–ஜ்ஞானஶக்திகள். இங்குச் சொல்லுகிற ஸௌலப்யத்துக்குக் கெல்லை நிலம் அர்ச்சாவதாரம். இதுதான் பரவ்யூக விபவங்கள் போலன்றிக்கே கண்ணாலே காணலாம்படியிருக்கும். இவையெல்லாம் நமக்கு நம்பெருமாள் பக்கலிலே காணலாம். திருக்கையிலே பிடித்த திவ்யாயுதங்களும், வைத்தஞ்சலென்றகையும், கவித்த முடியும், முகமும், முறுவலும், ஆஸந பத்மத்திலே அழுத்தின திருவடிகளுமாய் நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம். ரக்ஷகத்வ போக்யத்வங்களிரண்டும் திருமேனியிலே தோற்றும்.

சரணஶப்தார்த்தம்

[சரணௌ]–திருவடிகளை. இத்தால்–சேர்த்தியழகையும், உபாய பூர்த்தியையுஞ் சொல்லுகிறது. பிராட்டியும் அவனும் விடிலும் திருவடிகள் விடாது; திண்கழலாயிருக்கும். ஶேஷிபக்கல் ஶேஷபூதனிழியுந் துறை – ப்ரஜை முலையிலே வாய் வைக்குமாப்போலே. இத்தாற்–பிராட்டிக் கிருப்பிடமாய், குணப்ரகாஶகமுமாய், ஶிஶுபாலனையு மகப்படத் திருத்திச்சேர்த்துக்கொள்ளுந் திருமேனியை நினைக்கிறது.

ஶரணஶப்தார்த்தம்

[ஶரணம்] – இஷ்டப்ராப்திக்கும், அநிஷ்ட நிவ்ருத்திக்குந் தப்பாத வுபாயமாக. இத்தால் – ப்ராப்யந்தானே ப்ராபகமென்கிறது. கீழ்ச்சொன்ன மூன்றும் ப்ராப்யமிறே. இவன்செயலறுதியாலே உபாயமாக்குகிறானித்தனை. [சரணௌ ஶரணம்] – என்கையாலே உபாயாந்தர வ்யாவ்ருத்தமான உபாயமென்கிறது.

ப்ரபத்ய ஶப்தார்த்தம்

[ப்ரபத்யே]–பற்றுகிறேன். வாசிகமாகவும், காயிகமாகவும், பற்றினாலும் பேற்றுக்கழிவில்லை. ஜ்ஞாநாந்மோக்ஷமாகையாலே மாநஸமாகக் கடவது. உபாயமவனாகையாலும், இவை நேரே உபுபாயமல்லாமையாலும், இம்மூன்றும் வேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. வர்த்தமாந நிர்த்தேஶம் – ஸத்வந்தலை யெடுத் தஞ்சினபோதநுஸந்திக்கைக்காக. உபாயாந்தரங்களில் நெஞ்சு செல்லாமைக்கும், காலக்ஷேபத்துக்கும் இனிமையாலே விடவொண்ணாமையாலும், நடக்கும். பேற்றுக்குப் பலகாலும் வேணுமென்று நினைக்கில் உபாயம் நழுவும். [பூர்வகண்டார்த்தம் முற்றிற்று]

உத்தரகண்டார்த்தம்

உத்தரவாக்யத்தாலே ப்ராப்யஞ் சொல்லுகிறது. ப்ராப்யார்த்தரத்துக் கன்றென்கை. உபாயாந்தரங்களைவிட்டுச் சரமோபாயத்தைப் பற்றினாப்போலே உபேயாந்தரமானவைஶ்வர்ய கைவல்யங்களை விட்டு எல்லையான ப்ராப்யத்தை யர்த்திக்கைறது. இவனர்த்திக்க வேணுமோ, ஸர்வஜ்ஞன் இவன் நினைவறியானோ வென்னில். இவன் பாசுரங்கேட்டவாறே திருவுள்ளமுகக்கும். [ஶ்ரீமதே]–பெரிய பிராட்டியாரோடே கூடியிருந்துள்ளவனுக்கு. அவனுபாயமா மிடத்தில் தான் புருஷகாரமா யிருக்கும்; அவன் ப்ராப்யனா மிடத்தில் தான்

ப்ராப்யையுமாய், கைங்கர்ய வர்த்தகையுமாயிருக்கும். இதிலே திருமந்த்ரத்திற் சொன்ன ப்ராப்யத்தை விசதமாக வநுஸந்திக்கிறது. இளையபெருமாளைப்போலே யிருவருமான சேர்த்தியிலே யடிமை செய்கை முறை. அடிமைதான் ஸித்திப்பதும், ரஸிப்பதும் அச்சேர்த்தியிலே. [நாராயணாய]–ஸர்வசேஷியா யுள்ளவன்னுக்கு. இதிலே திருமேனியையும், குணங்களையுஞ் சொல்லும். சேஷித்வத்திலே நோக்கு. ப்ராப்தவிஷயத்தில் கைங்கர்யமிறே ரஸிப்பது. இந்த சதுர்த்தி–கைங்கர்யத்தை ப்ரகாசிப்பிக்கிறது. கைங்கர்யந்தான் நித்யம். நித்யமாக ப்ரார்த்தித்தே பெறவேணும். சேஷிக்கதிசயத்தை விளைக்கை சேஷபூதனுக்கு ஸ்வரூபலாபமும் ப்ராப்யமும். [நம:]–கைங்கர்யத்தில் களையறுக்கிறது. களையாவது:–தனக்கென்னப் பண்ணுமது. இதிலே அவைத்யாதிகளுங் கழியுண்ணும். (உனக்கே நாமாட்செய்வோம்) என்னும்படியே யாகவேணும். ஸௌந்தர்ய மந்தராயம்; கீழ்சோன்ன கைங்கர்யமு மப்படியே. கைங்கர்யப்ரார்த்தனைபோலே யிப்பதத்தில் ப்ரார்த்தனையு மென்றுமுண்டு. (மருந்தேநங்கள் போகமகிழ்ச்சிக்கு) என்னா நின்றதிறே.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

முமுக்ஷுப்படி

சரமஶ்லோகப்ரகரணம்

கீழே சில உபாயவிஶேஷங்களை யுபதேஶிக்க, அவை துஶ்ஶகங்களென்றும், ஸ்வரூபவிரோதிகளென்றும் நினைத்து, ஶோகாவிஷ்டனான வர்ஜுநனைக்குறித்து அவன்னுடைய ஶோகாநிவர்த்யர்த்தமாக இனி யிதுக் கவ்வருகில்லை யென்னும்படியான சரமோபாயத்தை யருளிச்செய்கையாலே, சரமஶ்லோகமென்று இதுக்குப் பேராயிருக்கிறது. இதில் பூர்வவாக்யத்தாலே அதிகாரி க்ருத்யத்தை யருளிச்செய்கிறான். அதிகாரிக்கு க்ருத்யமாவது – உபாய பரிக்ரஹம். அத்தை ஸாங்கமாக விதிக்கிறான். ராகப்ராப்தமான வுபாயந்தானே வையமானால் கடுகப்பரிக்ரஹிக்கைக் குடலாயிருக்குமிறே. இதில் பூர்வார்த்த மாறு பதம்.

ஸர்வதர்மஶப்தார்த்தம்

[ஸர்வதர்மாந்] – எல்லாதர்மங்களையும். தர்மமாவது – பலஸாதநமாயிருக்குமது. இங்குச்சொல்லுகிற தர்மஶ்ப்தம் – த்ருஷ்டபல ஸாதனங்களைச் சொல்லுகையன்றிக்கே மோக்ஷபலஸாதநங்களைச் சொல்லுகிறது. அவைதான் – ஶ்ருதி ஸ்ம்ருதி விஹிதங்களாய்ப் பவாயிருக்கையாலே, பஹுவசந ப்ரயோகம் பண்ணுகிறது. அவையாவன – கர்ம–ஜ்ஞாந–பக்தியோகங்களும், அவதாரரஹஸ்யஜ்ஞாநம், புருஷோத்தம வித்யை, தேஶவாஸம், திருநாமசங்கீர்த்தநம், திருவிளக்கெரிக்கை, திருமாலையெடுக்கை, தொடக்கமான உபாயபுத்யாச் செய்யுமவையும். ஸர்வஶப்தத்தாலே–அவ்வோஸாதந விஶேஷங்களை யநுஷ்டிக்குமிடத்தில் அவற்றுக்கு யோக்யதாபாதகங்களான நித்யகர்மங்களைச் சொல்லுகிறது. ஆக– ஶ்ருதி ஸ்ம்ருதி சோதிதங்களாய், நித்யநைமித்திகாதி ரூபங்களான கர்ம யோகாத்யுபாயங்களை யென்றபடி. இவற்றை தர்மமென்கிறது–ப்ரமித்தவர்ஜுநன் கருத்தாலே.

பரித்யஜ்யபதார்த்தம்

[பரித்யஜ்ய] – த்யாஜ்யமாவது – உக்தோபாயங்களை யநுஸந்தித்து, ஶுக்திகையிலே ரஜதபுத்தி பண்ணுவாரைப்போலேயும், விபரீத திஶாகமநம் பண்ணுவாரைப்போலேயும், அநுபாயங்களிலே யுபாயபுத்திபண்ணினோமென்கிற புத்திவிஶேஷத்தோடே த்யஜிக்கை. [பரி] – என்கிற உபஸர்க்கத்தாலே பாதகாதிகளை விடுமாப்போலே ருசிவாஸநைகளோடும், லஜ்ஜையோடுங்கூட மறுவலிடாதபடி விடவேணுமென்கிறது. ல்யப்பாலே – (ஸ்நாத்வாபுஞ்ஜீத) என்னுமாப்போலே உபாயாந்தரங்களைவிட்டே பற்றவேணு மென்கிறது. (சசாலசாபஞ்ச முமோச வீர: என்கிறபடியே இவை யநுபாயங்களான மாத்ரமன்றிக்கே கால்க்கட்டென்கிறது. சக்ரவர்த்தியைப்போலே யிழக்கைக்குறுப்பு. ஸர்வதர்மங்களையும் விட்டென்று சொல்லுகையாலே சிலர் அதர்மங்கள் புகுருமென்றர்க்கள். அது கூடாது, அதர்மங்களைச் செய் என்று சொல்லாமையாலே. தன்னடையே சொல்லிற்றாகாதோ வென்னில். ஆகாது, தர்மஶப்தம்–அதர்ம நிவர்த்தியைக் காட்டாமையாலே. காட்டினாலுமத்தை யொழிந்தவற்றை சொல்லிற்றாமித்தனை. தன்னையும், ஈஶ்வரனையும், பலத்தையும் பார்த்தா லவை புகுர வழியில்லை.

மாமினர்த்தம்

[மாம்] – ஸர்வரக்ஷகனாய், உனக்குக் கையாளாய், உன்னிசைவு பார்த்து, உன்தோஷங்களை போக்யமாகக் கொண்டு, உனக்குப் புகலாய், நீர் சுடுமாப் போலே, சேர்ப்பாரே பிரிக்கும் போதும், விடமாட்டாதே, ரக்ஷிக்கிறவென்னை. இத்தால் – பரவ்யூகங்களையுந், தேவதாந்தர்மியா மித்வத்தையுந் தவிர்க்கிறது. தர்மஸம்ஸ்தாபநம் பண்ணப் பிறந்தவன்தானே ஸர்வதர்மங்களையும் விட்டென்னைப்பற்றென்கையாலே, ஸாக்ஷாத்தர்மந்தானே யென்கிறது. இத்தால் – விட்டஸாதநங்களி லேற்றஞ் சொல்லுகிறது. அதாவது–ஸித்தமாய், பரமசேதநமாய், ஸர்வசக்தியாய்,நிரபாயமாய், ப்ராப்தமாய், ஸஹாயாந்தர நிரபேக்ஷமா யிருக்கை. மற்றவுபாயங்கள் ஸாத்யங்களாகையாலே ஸ்வரூபஸித்தியில் சேதநனை அபேக்ஷித்திருக்கும்; அசேதனங்களுமாய், அசக்தங்களுமா யிருக்கையாலே கார்யஸித்தியில் ஈச்வரனையபேக்ஷித்திருக்கும்; இந்தவுபாயம் அவற்றுக் கெதிர்த்தட்டா யிருக்கையாலே யிதரநிரபேக்ஷமாயிருக்கும். இதிலே வாத்ஸல்ய–ஸ்வாமித்வ–ஸௌசீல்ய–ஸௌலப்யங்களாகிற குணவிசேஷங்கள் நேராக ப்ரகாசிக்கிறது. கையு முழவுகோலும், பிடித்த சிறுவாய்க்கயிறும், ஸேநாதூளி தூஸரிதமான திருக்குழலும், தேருக்குக்கீழே நாட்டின திருவடிகளுமாய் நிற்கிறஸாரத்யவேஷத்தை மாமென்று காட்டுகிறான்.

ஏகசப்தார்த்தம்

[ஏகம்]. இந்த ஏகசப்தம் ஸ்தாந ப்ரமாணத்தாலே அவதாரணர்த்தத்தைக் காட்டுகிறது. (மாமேவ யே ப்ரபத்யந்தே) (தமேவசாத்யம்) (த்வமேவோபாயபூதோ மே பவ.) (ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்) என்றுஞ் சொல்லுகிறபடியே. இத்தால் – வ்ரஜ என்கிற ஸ்வீகாரத்தி லுபாயபாவத்தைத் தவிர்க்கிறது. ஸ்வீகாரந்தானுமவனாலே வந்தது. ஸ்ருஷ்ட்யவதாராதிமுகத்தாலே பண்ணின க்ருஷி பலம். (அதுவுமவனதின்னருளே). இத்தையொழியவுந்தானே கார்யஞ்செய்யு மென்று நினைக்கக் கடவன். அல்லாதபோது உபாயநைரபேஷ்யஞ் ஜீவியாது. இது – ஸர்வமுக்தி ப்ரஸங்கபரிஹாரார்த்தம், புத்திஸமாதாநார்த்தம், சைதந்யகார்யம், ராகப்ராப்தம், ஸ்வரூபநிஷ்டம், அப்ரதிஷேதத்யோதகம். கீழ்த்தானும் பிறருமான நிலையைக் கொலைத்தான்; இங்குத்தானு மவனுமான நிலையைக் கொலைக்கிறான். அவனை யிவன் பற்றும் பற்று–அஹங்காரகர்ப்பம், அவத்யகரம். அவனுடைய ஸ்வீகாரமே ரக்ஷகம். மற்ற வுபாயங்களுக்கு நிவ்ருத்தி தோஷம்; இதுக்கு ப்ரவ்ருத்திதோஷம். (சிற்றவேண்டா) நிவ்ருத்தி கீழே சொல்லிற்று. உபகாரஸ்ம்ருதியுஞ் சைதந்யத்தாலே வந்தது, உபாயத்தி லந்தர்ப்பவியாது.

சரணசப்தார்த்தம்

[சரணம்] – உபாயமாக. இந்த சரணசப்தம் – ரக்ஷிதாவையும், க்ருஹத்தையும், உபாயத்தையுங் காட்டக்கடவதே யாகிலும் இவ்விடத்தி லுபாயத்தையே காட்டுகிறது, கீழோடே சேரவேண்டுகையாலே.

வ்ரஜசப்தார்த்தம்

[வ்ரஜ] –புத்தி பண்ணு. கத்யர்த்தமாவது – புத்யர்த்தமாய், அத்யவஸியென்றபடி. வாசிக காயிகங்களும் இதுக்கு அபேஷிதங்களாயிருக்கச் செய்தேயும் ஜ்ஞாநாந்மோக்ஷமாகையாலே மாநஸமான வநுஷ்டானத்தைச் சொல்லுகிறது. ஆக – த்யாஜ்யத்தைச்சொல்லி, த்யாகப் ப்ரகாரத்தைச் சொல்லி, பற்றப்படுமுபாயத்தைச் சொல்லி, உபாயநைரபேக்ஷ்யஞ்சொல்லி, உபாயத்வஞ்சொல்லி, உபாயஸ்வீகாரஞ் சொல்லுகிறது.

அஹம்பதார்த்தம்

[அஹம்] – ஸ்வக்ருத்யத்தை யருளிச்செய்கிறான். ஸர்வஜ்ஞனாய், ஸர்வஶக்தியாய், ப்ராப்தனான நான். கீழ்நின்ற நிலையும், மேற்போக்கடி யறிகைக்கும், அறிந்தபடியே செய்து தலைக்கட்டுகைக்கும், ஏகாந்தமான குணவிஶேஷங்களையும், தன்பேறாகச்செய்து தலைக்கட்டுகைக்கீடான பந்தவிஶேஷத்தையுங் காட்டுகிறது. தனக்காகக் கொண்ட ஸாரத்யவேஷத்தையிட்டுப் பாராதே தன்னையிட்டுப் பார்த்தஞ்சின வச்சந்தீரத் தானான தன்மையை அஹம் என்று காட்டுகிறான். கீழிற்பாரதந்த்ர்யமும் இந்த ஸ்வாதந்த்ர்யத்தினுடைய எல்லைநிலமிறே.

த்வாவினர்த்தம்

[த்வா] – அஜ்ஞனாய், அஶக்தனாய், அப்ராப்தனாய், என்னையே யுபாயமாகப் பற்றியிருக்கிற வுன்னை.

ஸர்வபாபஶப்தார்த்தம்

[ஸர்வபாபேப்ய:] மத்ப்ராப்தி ப்ரதிபந்தகங்களென்று யாவை யாவை சிலபாபங்களைக்குறித்தஞ்சுகிறாய், அவ்வோபாபங்களெல்லாவற்றில் நின்றும். (பொய்நின்ற ஞாநமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பும்} என்கிறபடியே அவித்யா–கர்ம–வாஸநா–ருசு–ப்ரக்ருதி ஸம்பந்தங்களைச் சொல்லுகிறது. த்ருணச்ஶேதகண்டூயநாதிகளைப் போலே ப்ரக்ருதி வாஸனையாலே அநுவர்த்திகுமவையென்ன, லோகாபவாத்புத்தியாலும், கருணையாலும், கலக்கத்தாலும் செய்யுமவையென்ன, இவை எல்லாவற்றயும் நினைக்கிறது. உன்மத்தப்ரவ்ருத்திக்கு க்ராம ப்ராப்திபோலே த்யஜித்த வுபாயங்களிலே யிவை யங்விதங்களாமோவென்று நினைக்கவேண்டா. கலங்கியுபாயபுத்யாபண்ணும் ப்ரபத்தியும் பாதகத்தோடொக்கும்.

மோக்ஷயிஷ்யாமினர்த்தம்

[மோக்ஷயிஷ்யாமி] – முக்தனாம்படி பண்ணக்கடவேன். ணிச்சாலே – நானும்வேண்டா, நீயும்வேண்டா, அவை தன்னடையேவிட்டுப் போங்காணென்கிறான். என்னுடைய நிக்ரஹபலமாய் வந்தவை நானிரங்கினால் கிடக்குமோவென்கை. அநாதிகாலம் பாபங்களைக்கண்டு நீ பட்டபாட்டை அவைதான் படும்படி பண்ணுகிறேன். இனி யுன்கையிலு முன்னைக் காட்டித்தாரேன். என்னுடம்பி லழுக்கை நானே போக்கிக்கொள்ளேனோ.

மாஶுசவினர்த்தம்

[மாஶுச:] – நீயுன் கார்யத்திலே அதிகரியாமையாலும், நானுன் காரியத்திலே அதிகரித்துக்கொண்டுபோருகையாலும், உனக்கு ஶோகநிமித்த மில்லைகாணென்று அவனுடைய ஶோகநிவ்ருத்தியைப் பண்ணிக்கொடுக்கிறான். நிவர்த்தக ஸ்வருபத்தைச்சொல்லி, நிவர்த்யங்களுன்னைவந்து மேலிடாதென்று சொல்லி, உனக்கு ஶோகநிமித்த மில்லை காணென்கிறான். (எத்தினா லிடர்க்கடல் கிடத்தியேழை நெஞ்சமே) என்கிறான். பாபங்களை நான் பொறுத்து புண்யமென்று நினைப்பட நிற்க நீஶோகிக்கக்கடவையோ.

உகயுக்தார்த்தம்

உய்யக்கொண்டார் விஷயமாக உடையவ ரருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது. இதுக்கு ஈச்வர ஸ்வாதந்த்ர்யத்திலே நோக்கு. (இதுதான் அநுவாதகோடியிலே) என்று வங்கிப்புரத்து நம்பி வார்த்தை. அர்ஜ ூநன் க்ருஷ்ணனுடைய ஆனைத்தொழில்களாலும், ருஷிகள் வாக்யங்களாலும், க்ருஷ்ணன் தன் கார்யத்திலே அதிகரித்துக் கொண்டு போருகையாலும் இவனே நமக்குத் தஞ்சமென்று துணிந்தபின்பு தன்னைப் பற்றச் சொல்லுகையாலே. புறம்பு பிறந்தவையெல்லா மிவன் நெஞ்சை ஶோதிக்கைக்காக. வேதபுருஷ னுபாயாந்தரங்களை விதித்தது – கொண்டிப்பசுவுக்குத் தடிகட்டி விடுவாரைப் போலே அஹங்கார மமகாரங்களால் வந்த களிப்பற்று ஸ்வரூபஜ்ஞாநம் பிறக்கைக்காக. ஸந்யாஸி முன்புள்ளவற்றை விடுமாப்போலே, இவ்வளவு பிறந்தவனிவற்றைவிட்டால் குற்றம் வராது. இவன்தா னிவைதன்னை நேராக விட்டிலன். கர்மம் – கைங்கர்யத்திலே புகும்; ப்ரபத்தி – ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநத்திலே புகும். ஒரு பலத்துக்கரிய வழியையும், எளிய வழியையும் உபதேஶிக்கையாலே யிவையிரண்டுமொழிய பகவத்ப்ரஸாதமே யுபாயமாகக் கடவது. பேற்றுக்கு வேண்டுவது – விலக்காமையும், இரப்பும். சக்ரவர்த்தித் திருமகன் பாபத்தோடேவரிலு மமையுமென்றான்; இவன் புண்யத்தைப் பொகட்டு வரவேணுமென்றான். (ஆஸ்திகனாய் இவ்வர்த்தத்தில் ருசி விஶ்வாஸங்க ளுடையனாய் உஜ்ஜீவித்தல், நாஸ்திகனாய் நஶித்தலொழிய நடுவில் நிலையில்லை) என்று பட்டர்க் கெம்பாரருளிச் செய்த வார்த்தை. வ்யவஸாய மில்லாதவனுக்கு இதிலந்வயம் – ஆமத்தில் போஜநம் போலே. (விட்டு சித்தர் கேட்டிருப்பர்) என்கிறபடியே இதுக்கு அதிகாரிகள் நியதர். (வார்த்தையறிபவர்) என்கிற பாட்டும், (அத்தனாகி) என்கிற பாட்டும், இதுக்கர்த்தமாக வநுஸந்தேயம்.

உலகாசிரியர் திருவடிகளே ஶரணம்.
ஜீயர் திருவடிகளே ஶரணம்.